1992 செப்டம்பர் 22]

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேன்கனிக்கோட்டை தாலுக்காவில் அஞ்செட்டியில் ஒரு கால்நடை மருந்தகம் தற்போது இயங்கி வருகிறது. தேன்கனிக்கோட்டையில் அஞ்செட்டியில் நடமாடும் கால்நடை மருந்தகம் அமைக்கும் பிரேரணை பெறப்படின் தேவையின் அடிப்படையிலும், நிதி நிலையின் அடிப்படையிலும் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 40, டாக்டர் எம்.கருப்புசாமி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

40 —

குன்னூர் தொகுதியில் தொழிற்பேட்டை அமைத்தல்.

*9570 —டாக்டர் எம். கருப்புசாமி :

மாண்புமிகு ஊரகத்தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குன்னூர் தொகுதியில் ஒரு தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர்மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) குன்னூரில் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் நெல் விளைவதில்லை. ஆகவே அங்கே உள்ள மக்களுடைய வாழ்வில் தினசரி அரிசி பற்றாக் குறை இருக்கிறது. சற்று அரிசியைக் கூட்டிக் கொடுங்கள் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களைக் கேட்டவுடன் ஒரு மாதத்திற்குள்ளாக ஒவ்வொரு ரேஷன் கார்டுக்கும் 4 கிலோ அரிசியை அதிகமாகக் கொடுத்து மக்களுடைய பசியைத் தீர்த்த இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியைக் கூறிக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இவ்வாறாக நீலகிரி மாவட்ட மக்களின் மேல் அன்பும் பாசமும்

கொண்டுள்ளவர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். நீலகிரி மாவட்டம் மிகவும் அருமையான சீதோஷ்ண நிலை கொண்டது. உலகத்திலேயே மிக நல்ல முறையில் இயங்கக் கூடிய மிகச் சிறந்த ஊசிகளைத் தயாரிக்கக் கூடிய நீடில் பேக்டரியும், நாய் கடிக்கு உள்ள ஆண்டி-ராபிஸ்-வேக்சின் என்று சொல்லக் கூடிய மருந்தும் தயாரிக்கக் கூடிய நல்ல சீதோஷ்ண நிலை உள்ளது. மேலும் இங்கு 200-க்கும் மேற்பட்ட தேயிலை தொழிற்சாலைகள் உள்ளன. அந்த 200-க்கும் மேற்பட்ட தேயிலை தொழிற்சாலைகளுக்கு வேண்டிய உதிரி பாகங்கள் வெளி மாநிலங்களிலிருந்து தருவிக்கப்படுகின்றன. ஆகவே, அந்த உதிரி பாகங்களைத் தயாரிக்கவும் அலுமினியம் தாதுக்கள் அடங்கிய மண் இங்கிருந்து வெளி மாநிலங்களுக்கும் மற்ற மாவட்டங்களுக்கும் கொண்டு செல்லப்பட்டு அங்கு அலுமினியம் தயாரிக்கப்படுகிறது. அம்மாதிரி அங்கேயே தயாரிக்கவும்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாவாகக் கேட்கவும்.

டாக்டர் எம். கருப்புசாமி: இவ்வாறு பல வகையான மூல தனப் பொருட்களைக் கொண்டுள்ள மாவட்டத்திலேயே ஒரு தொழிற்பேட்டையை அமைத்தால் நன்றாக இருக்கும். நீலகிரி மாவட்டத்தில் அலுமினியம் தொழிற்சாலையும் அமைத்து, தேயிலே தொழிற்சாலைகளுக்கு வேண்டிய உதிரி பாகங்களைத் தயாரிக்கும் தொழிற் கூடங்களைத் தந்தால் அந்த மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்பதால், அதை அடுத்த ஆண்டிலாவது பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர்மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நீலகிரி மாவட்டத்தில் உள்ள ஊட்டியில் சிட்கோ தொழிற்பேட்டை ஒன்று உள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குன்னூரில் தொழிற்பேட்டை அமைக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். எனவே குன்னூரை பொறுத்த அளவில் 10 சிறு தொழில் முனைவர்கள் தகுந்த துணை திட்டத்துடன் முன்வருவார்களேயானால் தொழிற்பேட்டை அமைக்க மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

முற்பகல் 10-40

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]